# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1569/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | கணேசன் | த-பெ | அழகப்பன் |
| ஊர்: | : | கூத்தலூர் | | |
| வயது: | : | 36/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஆசாரி | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.04.2026

**எதிரி ஆஜர்.**

------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை தொடர்ச்சி..

விபத்து சமயத்தில் என்னுடைய சகோதரர் மற்றும் அவருடைய நண்பர் ஆகியோர்களுக்கு சிகிச்சை அளிக்கும் முயற்சியில் இருந்ததாலும் பதற்றத்தில் இருந்ததாலும் விபத்தை ஏற்படுத்திய நபரை என்னால் சரியாக அடையாளம் காண இயலவில்லை.

குறுக்கு விசாரணை

1. சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தை கேள்விபட்டு தான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். நான் சென்றபோது சம்பவ இடத்தில் கூட்டமாக இருந்தார்கள் ஆம்புலன்ஸில் ஏற்றிக்கொண்டு இருந்தார்கள் என்றால் சரிதான். அந்த இடத்தில் நான் ஓட்டுநர் யாரையும் பார்க்கவில்லை என்றால் சரிதான். மைக்கேல் என்பவர் மது அருந்திவிட்டு தான் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார் என்று தெரிந்து கொண்டேனா என்றால் கேள்விபட்டு தெரிந்து கொண்டேன். மது அருந்திவிட்டு வாகனத்தை ஓட்டியதால் தான் விபத்து ஏற்பட்டது என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.06 14:09:13 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
C.C. No.1569/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பெரியசாமி | த-பெ | அழகப்பன் |
| ஊர்: | : | கூத்தலூர் | | |
| வயது: | : | 42/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஆசாரி | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.04.2026

**எதிரி ஆஜர்.**

---------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை தொடர்ச்சி..

விபத்து சமயத்தில் நான் மயக்கம் அடைந்த காரணத்தால் விபத்தை ஏற்படுத்திய நபரை என்னால் சரியாக அடையாளம் காணஇயலவில்லை. எதிரியை பார்த்தால் அவர் போல் தான் தெரிகிறது. உறுதியாக சொல்லமுடியவில்லை.

குறுக்கு விசாரணை

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ரோடானது ஒரே நேரத்தில் இரு பக்கமும் பல வாகனங்கள் செல்லக்கூடிய அகலமான ரோடு என்றால் சரிதான். மேற்படி ரோடானது இராமேஸ்வரம் - திருச்சி தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். மேற்படி ரோட்டில் அதிகமான வாகனங்கள் சென்று வரும் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் எனது வாகனம் சென்று கொண்டிருந்தபோது வெள்ளை நிற கார் ஒன்று குறுக்கே வந்து மோதியதாக நான் சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரிலோ போலீசார் விசாரணையிலோ வண்டியின் பதிவெண்ணையோ வண்டியில் எத்தனை நபர்கள் பயணம் செய்தார்கள் என்ற விபரத்தையோ சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து ஏற்பட்ட நேரத்தில் நான் மயக்கமுற்று கீழே விழுந்துவிட்டேன் என்றாலும் அதன் பிறகு எனக்கு என்ன நடந்தது என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு மைக்கேல் என்பவரை எத்தனை வருடமாக தெரியும் என்றால் சின்ன வயதில் இருந்தே தெரியும். சம்பத்தன்று மைக்கேல் என்பவர் மது போதையில் வாகனத்தை ஓட்டி வந்தார் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி அன்று நான்

ஓட்டுநர் யார் என்று பார்க்கவில்லை என்றால் சரிதான். மைக்கேல் என்பவர் மது அருந்திவிட்டு வாகனத்தை ஓட்டியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.06 14:09:18 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.